பிரிவு 4 கந்தபுராணம்

பதினெண்புராணங்களில் சிறப்புகள் பொருந்திய பெருமை மிக்கது கந்தபுராணம்.

“**இந்திராகிப் பார் மேல் இன்பமுற்று இனிது மேவிச் சிந்தையில் நினைந்த முத்தி சிவகதி அதனில் சேர்வர் அந்திமில் அவுணர் தங்கள் அடல் கெட முனிந்த செவ்வேள் கந்தவேள் புராணம் தன்னைக் காதலித்து ஓதுவோரே**”

முருகப்பெருமானின் திருவரலாறாகிய கந்தபுராணத்தைக் காதலுடன் இப்புவியில் படிப்போர், கேட்போர்,நினைப்போர் யாவரும் இந்திரனைப் போலத் தலைமைத்துவமும் இன்பமும் மிக்க வாழ்வை வாழ்ந்து,இறுதியில் பரமானந்த நிலையாகிய சிவபதப் பேறும் பெறுவர் என்று கந்தபுராணச்சிறப்பு போற்றப்படுகின்றது. தமிழகத்தின் காஞ்சியில், குமரகோட்டம் முருகன் ஆலய அர்ச்சகராகத் திகழ்ந்தவர் கச்சியப்ப சிவாச்சாரியார்.அவரிற்கு முருகனே ‘திகட சக்கர’ என்று முதல் அடியெடுத்துக் கொடுக்க

“**திகட சக்கரச் செம்முகம் ஐந்துளான் சகட சக்கரத் தாமரை நாயகன் அகட சக்கர வின்மணி யாவுறை விகட சக்கரன் மெய்ப்பதம் போற்றுவாம்**.”

என்று விநாயகர் காப்புப் பாடலுடன் தொடங்கி கந்தபுராணத்தை பாடியருளினார். ‘உபதேச ரத்னாகரம்’ என்று போற்றப்படும் கந்தபுராணம், காப்பிய இலக்கணங்கள் மிக்கதாக, சித்தாந்தக் கருத்துக்களின் செறிவுடையதாக, தத்துவார்த்த உண்மைகள் பொருந்தப் பெற்றதாக, அமைந்திருக்கிறது. முருகப்பெருமானாலேயே அடியெடுத்துக் கொடுக்கப் பெற்று, அவராலேயே தினமும் பரிசீலனை செய்யப்பெற்றதாயினும், அரங்கேற்றத்தில் அறிஞர் முன்றலில் இலக்கணச் சந்தேகம் உண்டானது. அப்போது கந்தவேட் பெருமானே புலவர் வடிவுதாங்கி வந்து, தன்னால் அங்கீகரிக்கப்பெற்ற நூல் இது என்று யாவரும் அறிய சந்தேகம் நீக்கினார். மிகத் தெளிவாக ‘இறையாணை’ பெற்ற நூல் கந்தபுராணம் என்பது சைவத்தமிழ் மக்களின் நம்பிக்கை.

கந்த புராணம் ஒரு அரிய தத்துவப்புதையல். இப்புராணத்தின் ஒவ்வொரு நிலையிலும் இதனை உணர்ந்து அனுபவிக்கவேண்டும். கந்தன் இளமையின் வடிவம். ஆற்றலின் நிலையம் என்று கூறும் கந்த புராணம் அவனின் மனைவியராக வலதுபக்கம் வள்ளி, இடது பக்கம் தேவசேனா என இரு தேவியரைக் காட்டும். முருகனின் மூன்றாவது சக்தியாகிய வேல் அவன் கரத்தில் விளங்குகிறது. அது வெற்றியைத் தருவது. ஞானமே வடிவெடுத்த ஞானசக்தி . ‘வெல்’ என்ற வினையடியில் தோன்றியது ‘வேல்’. அது ஞானமே உருவானது. ஆழ்ந்து அகன்று கூர்மையாகி அறிவின் வெளிப்பாடாகத் திகழ்கின்றது. செவ்வேட் பெருமானின் திருக்கரத்தில் சேவற்கொடி விளங்குகின்றது.அஞ்ஞான வாகனமான மயில், ஆசை என்ற பாம்பை அடக்கி பிரம்மசக்தியாக ஓம்காரரூபமாக காட்சியளிக்கின்றது.

முருகன் கைவேலுக்கு உரிய சிறப்பு வேறு எப்படைக்கும்இல்லை. முருகனுடைய ஆறு திருமுகங்களும் அன்பு, அறிவு, ஆற்றல், அழகு, அமைதி, ஆளுமை ஆகிய பண்புகளை உணர்த்துகின்றன. நாற்றிசையும் மேலும் கீழும் ஆக, ஆறு பக்கங்களும் பார்த்து நிற்கும் இத்திருமுகங்களை நம்புவோருக்கு துன்பம் எத்திசையாலும் வாரா. அவனது கரங்கள் பன்னிரண்டும் கொடுப்பதற்கென்றே பிறந்தன. அதனை,

“**முழுமதி அன்ன ஆறுமுகங்களும் முன் நான்காகும் விழிகளில் அருளும் வேலும் வேறுள படையும் சீரும் அழகிய கரம் ஈராறும் அணிமணித் தண்டை ஆர்க்கும் செழுமலரடியும்**....”

என்று தெவிட்டாத தேனாகத் தமிழில் பாடுவார் கச்சியப்பர்.கந்தபுராண காவிய ரசனையை உளத்தில் கொள்வோம்.

செம்மொழியான செந்தமிழின் தலைவன் முருகன். என்றும் அவனடி பணிவோம்.

“**மேன்மை கொள் சைவ நீதி விளங்குக உலகமெல்லாம்**.”